*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*17 10 2025* *FRIDAY* *12.40 PM*
*ஆகாஷவாணி*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

- *நாசிக்கில் தயாரிக்கப்பட்ட முதலாவது இலகுரக தேஜஸ் போர் விமானத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று அறிமுகப்படுத்தினார்.*

- *வடகிழக்கு மாநிலங்கள், நாட்டின் வளர்ச்சி இயந்திரமாக உருவெடுத்துள்ளன என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.*

- *சட்டீஸ்கர் மாநிலத்தில் 208 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.*

- *இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீர்திருத்தங்கள் காரணமாக அந்நாட்டு பொருளாதாரம் மேம்பட்டு வருவதாக சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.*

- *மெக்சிகோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli – மெக்சிகோவின் Jessica இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<<>>>>>>*

*மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக்கில் தயாரிக்கப்படும் முதலாவது இலகுரக தேஜஸ் போர் விமானத்தை, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று அறிமுகப்படுத்தினார்.*

*இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தால் பெங்களூருவில் உள்ள இரண்டு இடங்களில் தேஜஸ் விமானங்கள் தயாரிக்கப்படும் நிலையில், மூன்றாவதாக நாசிக்கில் உள்ள ஆலையில் தயாரிக்கப்பட்ட MK-1 A ரக போர் விமானம் இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.*

*150 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலையையும் சேர்த்து இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் ஆண்டுக்கு 24 போர் விமானங்களை தயாரிக்கும் திறன் பெற்றதாக உருவெடுத்துள்ளது.*

*இதுதவிர, நாசிக்கில் அமைக்கப்பட்டுள்ள HTT-40 ரக பயிற்சி விமான உற்பத்தி ஆலையின் இரண்டாவது பிரிவையும் திரு ராஜ்நாத் சிங் இன்று தொடங்கிவைத்தார்.*

*<<<<<>>>>>>*

*தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், உஸ்பெகிஸ்தான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் திரு. Victor Makhmudov-ஐ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.*

*Bishkek நகரில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, பாதுகாப்புத்துறை சார்ந்த இருதரப்பு ஒத்துழைப்புகள் மற்றும் உளவுத்தகவல் பரிமாற்றம் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*இதேபோன்று, கஜகஸ்தான் பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் Gizat Daurenbekovich Nurdauletov -வையும் சந்தித்து தீவிரவாதம், மதமாற்றம், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

<<<<<>>>>>>

*வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேசில் துணை அதிபரும், அந்நாட்டு வர்த்தக தொழில்துறை அமைச்சருமான திரு Geraldoalckmin-ஐ சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் நடைபெற்ற இந்த சந்திப்பு குறித்து, டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா - பிரேசில் இடையேயான வர்த்தகம், முதலீடு, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து பிரேசில் துணை அதிபருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

<<<<<>>>>>>

*வடகிழக்கு மாநிலங்கள், நாட்டின் வளர்ச்சி இயந்திரமாக உருவெடுத்துள்ளன என்று மத்திய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.*

*வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறையின் செயல்பாடுகள் குறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களின் சிறப்புகளை உலக அரங்கில் எடுத்துரைக்க மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.*

*இந்த பகுதியில் முன்பு 9 விமான நிலையங்கள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 17-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*தேசிய நெடுஞ்சாலையும் 10 ஆயிரம் கிலோமீட்டரிலிருந்து, 16 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*வடகிழக்கு முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் 4 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டிற்கான உத்தரவாதம் பெறப்பட்டுள்ளதாகவும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.*

*<<<<<>>>>>>*

*இந்திய விமானப்படை மற்றும் கடலோர காவல்படையினர் தங்களது Scuba Diving பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.*

*ஆழ்கடல் வளங்களை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், கோவாவிலிருந்து 75 கடல்மைல் தொலைவில் உள்ள Angria Bank பகுதியில் கடந்த 8-ஆம் தேதி முதல் நேற்று வரை இந்த கூட்டுப்பயணம் நடைபெற்றது.*

*இதில், விமானப்படை மற்றும் கடலோர காவல்படையினர் பங்கேற்று, பிளாஸ்டிக் கழிவுகளால் கடலோர சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் மாசுபாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.*

*பயணத்தை முடித்து திரும்பிய வீரர்களுக்கு விமானப்படை மற்றும் கடலோர காவல்படை உயரதிகாரிகள் பாராட்டு தெரிவித்தனர்.*

*<<<<<>>>>>>*

*சட்டீஸ்கர் மாநிலத்தில் 208 நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.*

*இவர்களில் 110 பேர் பெண்கள் ஆவர்.*

*பஸ்தார் பகுதியை சேர்ந்த இந்த நக்சலைட்டுகள், தாங்கள் பயன்படுத்தி வந்த துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் காவல்துறை உயரதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.*

*இதன்மூலம், அந்த பகுதி நக்சலைட்டுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*<<<<<>>>>>>*

*கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோவில் தங்கத்தகடு முறைகேடு தொடர்பான வழக்கில், முக்கிய குற்றவாளியாக கருதப்படும் உபயதாரர் உன்னிகிருஷ்ணன் போத்தி திருவனந்தபுரத்தில் கைது செய்யப்பட்டார்.*

கேரள உயர்நீதிமன்ற உத்தரவுப்படி விசாரணை மேற்கொண்டுவரும் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

உன்னிகிருஷ்ணன் போத்தியை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விசாரணை மேற்கொள்ள சிறப்பு புலனாய்வுக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்திற்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த சீர்திருத்த நடவடிக்கை காரணமாக, வேளாண் சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் டிராக்டர், மருந்து தெளிப்பான் உள்ளிட்ட சாதனங்களின் விலை குறைந்திருப்பது தங்களுக்கு மிகவும் பயனளிப்பதாக உள்ளது என்று தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி ஒருவர், எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – விவசாயி சக்திவேல் – 44 Sec. )*

<<<<<>>>>>>

விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் காயங்களின் பாதிப்புகளை குறைக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

உலக விபத்து காய தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விபத்துகளின் மூலம் ஏற்படும் காயங்களால் ஏராளமானோர் உயிரிழப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தவிர்க்க விபத்து மற்றும் தீக்காய சிகிச்சை பிரிவுகளை விரிவுபடுத்துவதுடன், பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சீர்திருத்தங்கள் காரணமாக அந்நாட்டு பொருளாதார நிலை மேம்பட்டு வருவதாக சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

ஆசிய பசிபிக் பிராந்திய பொருளாதார நிலை குறித்து பேசிய இந்த நிதியத்தின் இயக்குனர் திரு கிருஷ்ணா சீனிவாசன், துணை இயக்குனர் தாமஸ் Helbling ஆகியோர் இலங்கையின்

*பொருளாதாரம் கடந்த ஆண்டு ஐந்து சதவீத அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளதாகவும், இந்த ஆண்டு அது மேலும் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.*

*சர்வதேச செலாவணி நிதியத்தின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும் நீடித்த வளர்ச்சிக்கான திட்டங்கள் உரிய பலனை அளித்திருப்பதாக திரு தாமஸ் Helbling குறிப்பிட்டார்.*

*<<<<<>>>>>>*

*காஸா பகுதியில் வைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் பிணைக்கைதிகளின் உடல்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.*

*அக்டோபர் தாக்குதல் தினத்தையொட்டி ஜெருசலேமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தீவிரவாதத்தை எதிர்த்து இஸ்ரேல் தொடர்ந்து போராடும் என்று உறுதிபட தெரிவித்தார்.*

*இதனிடையே, காஸா அமைதி உடன்படிக்கையின்படி, ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேலை சேர்ந்த ஒன்பது பிணைக்கைதிகளின் சடலங்களை மட்டும் ஒப்படைத்துள்ளதாகவும், எஞ்சிய 19 பேரை இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<>>>>>>*

*மெக்சிகோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகாஜா எமலபள்ளி – மெக்சிகோவின் ஜெசிகா இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 7-5 என்ற செட் கணக்கில், பல்கேரியாவின் Lia Karatan Cheva – உக்ரைனின் Valareya இணையை வென்றது.*

*<<<<<>>>>>>*

*Boston ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-4, 11-6, 9-11, 11-8 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Charlotte Sze -ஐ வென்றார்.*

*<<<<<>>>>>>*

*ஜோஹர்கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.*

*மலேயாவில் இப்போட்டி பிற்பகல் மணி 1.35-க்கு தொடங்குகிறது.*

*<<<<<>>>>>>*